<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>

<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

**<u>MCOP. No. 13/2019</u>**

எ.ம.சா.1 தேதி. 07.02.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாபு | த/பெ, | நடராஜன் |
| வயது | 35 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இந்த மனுவில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தான் தட்டச்சு செய்யப்பட்டது.

இந்த வழக்கை 1ம் எதிர்மனுதாரர் நடராஜன் எனது தகப்பனார் ஆவார், அவரின் இருசக்கர வாகனத்தை ஓட்டியதாக என்மீது குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதனை நான் சீர்காழி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் CC 118/2008 என்ற வழக்கினை நடத்தி, அதில் விடுதலை பெற்றேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் மேற்படி குற்ற வழக்கில் PW1 ன் Deposition சான்றிட்ட நகல் (மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) **எ.ம.சா.ஆ.5** ஆகவும், குற்ற வழக்கில் PW4 ன் Deposition சான்றிட்ட நகல் (மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) **எ.ம.சா.ஆ.6** ஆகவும், குற்ற வழக்கில் PW7 ன் Deposition சான்றிட்ட நகல் (மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) **எ.ம.சா.ஆ.7** ஆகவும், குற்ற வழக்கில் PW10 ன் Deposition சான்றிட்ட நகல் (மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) **எ.ம.சா.ஆ.8** ஆகவும், அந்த வழக்கில் ராமசாமி, த/பெ. கோவிந்தன் என்பவருடைய 161(c)வாக்குமூலம் சான்றிட்ட நகல் (மனுதாரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) **எ.ம.சா.ஆ.9** ஆகவும் ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுதாரர் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.